**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூன் மாதம் 26 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆனி மாதம் 12 ம் நாள்
**இ.ம.எண். 1/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 100/2021**

1. வசந்தராஜா
2. மீனாட்சி
3. ராஜ்மீனா ..மனுதாரர்கள்/ 1,2,3 பிரதிவாதிகள்

//எதிர்//

1) அன்பழகன்
2) சிவசங்கரி ..எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

4. சத்யவதி
5. கிருஷ்ணராஜா
6. ஞானசேகரன்
7. தமிழ்நாடு அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர்,
   மயிலாடுதுறை.
8. தஞ்சாவூர் டவுன் நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்கள்,
   தஞ்சாவூர்.
9. தரங்கம்பாடி டவுன் தாசில்தார் அவர்கள்,
   தரங்கம்பாடி.
10. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் TANGEDCO,
    சென்னை.
11. இளைய பொறியாளர் (O&M) அவர்கள்,
    ஆக்கூர். ..எதிர்மனுதாரர்/4 முதல் 11 பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என் முன்பாக இன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. J. பாரி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. R. சேயோன், அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

## உத்தரவு

சமூகம் கோர்ட்டார் அவர்கள் கடந்த 17.02.2025–ல் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்யக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம் :**

2. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவார். மற்ற 1 மற்றும் 3ம் பிரதிவாதிக்களுக்கும் சேர்த்து தானே இவ்வழக்கை கவனித்து வருவதாகவும், மேற்படி எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தங்கள் மேல் வழக்கு தொடரப்பட்டு அதில் எதிர் உரை தாக்கல் செய்ய 17.02.2025–ல் இறுதியாக கெடு போடப்பட்டு இருந்தது என்றும், அன்றைய தினம் தனக்கு மிகவும் வயிற்றுவலி ஏற்பட்டு உடல்நலம் பாதிக்கப்பட்டு இருந்த காரணத்தால் தன்னை பார்த்துக்கொள்ள தனது மகன் மற்றும் மகளும் துணையாக இருந்ததாகவும், ஆகையால் தங்களால் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை என்றும், மேற்படி வழக்கில் அன்றைய தினம் எதிர்உரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தங்களை தோன்றா தரப்பினராக செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், இந்த மனு அனுமதிக்கப்படாவிட்டால் பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும், மேற்படி வழக்கில் தங்களுக்கு நல்ல கட்சி உள்ளதால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் கடந்த 17.02.2025–ல் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்யக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளார்.

**எதிருரையின் சுருக்கம் :**

3. இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்ததக்கது அல்ல. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும், மனுதாரர்கள் வழக்கில் நீதிமன்ற அழைப்பாணை பெற்று 06.01.2022 அன்று வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் அசல் வழக்கில் மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் 3 வருடங்களுக்கு மேலாக காலம் கடத்தி நீதிமன்றமும் அதிகபட்ச கால அவகாசம் வழங்கியும் மனுதாரர்கள் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் 17.02.2025 அன்று மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு

பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், தற்போது ஒருதலைபட்சம் தீர்ப்பினை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்து உள்ள மனுவானது ஏற்புடையதல்ல என்றும், அதனை பின்னிட்டு மனுதாரர்கள் வழக்கில் வேண்டுமென்றே காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்புடையது அல்ல என்றும், அதற்கான ஆவணங்கள் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மனுதாரர்கள் தரப்பில் 3 வருடங்களாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாத காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை என்றும், எனவே, இந்த மனுவை செலவுத்தொகையுடன் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

## தீர்வு

5. மனுதாரர்கள் தரப்பில், எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், கடந்த 17.02.2025 அன்று மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், அன்றைய தினம் 2ம் மனுதாரருக்கு வயிற்று வலி ஏற்பட்டு உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் அவரை பார்த்துக்கொள்ள 1 மற்றும் 3 மனுதாரர்கள் அவருடன் இருந்ததால் அவர்களால் நீதிமன்றத்திற்கு வரஇயலவில்லை என்றும், அவர்களது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றிய விவரங்களை அளிக்க இயலவில்லை என்றும், அதனால் தங்களது தரப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அன்றைய தினம் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டதாகவும், எனவே, தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த மனு அனுமதிக்கப்படாவிட்டால் பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது.

6. 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் அசல் வழக்கில் எதிருரை தாக்கல் செய்யாமல் 3 வருடங்களுக்கு மேலாக காலம் கடத்தி நீதிமன்றமும்

அதிகப்பட்ச கால அவகாசம் கொடுத்தும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் வழக்கை கால தாமதம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்புடையது அல்ல என்றும், அதற்கான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**7.** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர்களுக்கு எதிராக எதிர்மனுதாரர்கள் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அதில் மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு கடந்த 16.12.2021 அன்று வழக்கறிஞர் மூலம் ஆஜராகி உள்ளனர். மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த வழக்குரையை நிராகரிக்க கோரி மனுதாக்கல் செய்து அந்த மனுவானது கடந்த 19.10.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகும் மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பு அளித்தும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர்கள் தரப்பில் 2ம் மனுதாரருக்கு கடந்த 17.02.2025 அன்று வயிற்றுவலி ஏற்பட்டதாகவும், அதனால் அவரை பார்த்துக் கொள்ள அவரது பிள்ளைகளான 1 மற்றும் 3 மனுதாரர்கள் அவருடன் இருந்ததால் நீதிமன்றத்திற்கு வந்து எதிர் வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கால தாமதமாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. மனுதாரர் கூறிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இருந்தபோதிலும், மனுதாரர்களுக்கு தனது தரப்பு வழக்கை எடுத்துகூறுவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இருதரப்பையும் கேட்டு வழக்கினை விசாரித்து தீர்வு காண்பதே முழுமையான தீர்வாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவை அனுமதிக்கலாம் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு 26.06.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

(ஒப்பம்) P. கனிமொழி,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**தரங்கம்பாடி.**

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

(ஒப்பம்) P. கனிமொழி,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி**